# தாம்பரம் மாநகராட்சி

## பாதாளசாக்கடைதிட்டம்

தாம்பரம் மாநகராட்சி செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள மாநகராட்சியாகும். மாநகராட்சியின் பரப்பளவு 87.64 சதுரகீ.மீ ஆகும். மாநகராட்சியில் மொத்தம் 70 வார்டுகள் உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் 10,11,320 ஆகும்.

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சுமார் 993. 344 கி.மீ நீளத்திற்கு மாநகராட்சி சாலைகளும் 64.406 கி.மீ நீளத்தில் நெடுஞ்சாலை துறை சாலைகளும் , 749.696 நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் அமைந்துள்ளன. தாம்பரம் பல்லவபுரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம், மாடம்பாக்கம், சிட்லபாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கர்ணை மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் தாம்பரம் பல்லவபுரம், பம்மல் மற்றும் அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளில் மட்டும் பாதாள சாக்கடை திட்டம் உள்ளது.

மேற்படி திட்டம் பல்லவபுரம் பகுதியில் ரூ. 75.33 கோடி மதிப்பீட்டில் 159.74 கி.மீ நீளத்திலும், விடுப்பட்ட பகுதிகளுக்கு ரூ.42.00 கோடி மதிப்பீட்டில் 42 கி.மி நீளத்தில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்று டிசம்பர் 2012 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. தாம்பரம் பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் ரூ. 160.69 கோடி மதிப்பீட்டில் ரூ. 177.181 கி.மீ நீளத்தில் 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. தாம்பரம் பகுதியில் 30 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் அனகாபுத்தூர் மற்றும் பம்மல் ஆகிய பகுதிகளுக்கு ரூ.211.15 கோடி மதிப்பீட்டில் 100.315 கி.மீ நீளத்ற்கு பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள 26.02.2021ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

தாம்பரம் மாநகராட்சியின் 70 வார்டுகளில் 19 வார்டுகளில் பொது மக்கள்பயன்பாட்டிலும், 16 வார்டுகளில் (தாம்பரம்) பணி முடிவடையும் நிலையிலும், 12 வார்டுகளில் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 23 வார்டுகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் பாதாள சாக்கடை முடிவுற்ற பகுதிகளில் வீட்டு இணைப்புகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு 102549 இணைப்புகளில் 41582 இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளன.

மாண்புமிகு. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் 2022-23 ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.34ன் படி தாம்பரம் மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுடன் புதியதாக இணைக்கப்பட உள்ள 15 ஊராட்சி அமைப்புகளுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யும் பணி M/s.Royal Haskoning DHV தனியார் கலந்தாய்வர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆணையாளர்,

தாம்பரம் மாநகராட்சி.

**TAMBARAM CITY MUNICIPAL CORPORATION**

**UNDER GROUND DRAINAGE SCHEME**

Tambaram City Municipal Corporation is located in Chengalpattu District. The area of the Corporation is about 87.64sq.m. The 2011 census population is 10,11,320 census in 70 wards.

## Existing Status

In Pallavapuram the Underground Drainage Scheme was completed in the year December 2012 at an estimated cost Rs. 75.33 Cr for a length of 159.74 Km and the uncovered areas were later covered at an estimated cost of Rs. 42.00 crores for a length of 42 Km the Sewage is getting disposed in STP at Perungudi.

## Ongoing Status

In Tambaram area the Underground Sewerage Scheme is under progress at an estimated cost of Rs.160.69crores. Around 177.181 km stretch of laying pipeline has been completed and the remaining work is progressing. The 30MLD STP at Mannurankulam is available to treat the sewage water. In Anakaputtur and Pammal areas the UGSS work order has been issued on 26.02.2021 to carry out underground Drainage scheme works for 100.315 km length at an estimated cost of Rs. 211.15 crores. The work is under progress.
Out of 70 wards of Tambaram Corporation, 19 wards have UGD scheme, in 16 wards (Tambaram) nearing completion and work is in progress in 12 wards. The work of providing house connections have been completed to 41582 houses out of 102549 connections

The Preparation of Detailed Project Report for Integrated UGSS including 15 Village Panchayats is being done by TNUIFSL.

**Commissioner,**
**Tambaram City Municipal Corporation.**